தினமணி திருச்சி
ஞாயிற்றுக்கிழமை, 11 பிப்ரவரி, 2007

## நாகை நகராட்சியில் தொடங்கப்பட்டது

# கழிவுகளற்ற திடக் கழிவு நிர்வாக மையம்




நாகை நகராட்சியில் அரசு மருத்துவமனை பின்புறம் கழிவுகளற்ற திடக் கழிவு நிர்வாக மையத்தை தொடக்கி வைத்து பேசுகிறார் ஆட்சியர் தெ.சு. ஜவஹர்.

நாகப்பட்டினம், பிப். 11: நாகையில் கழிவுகளற்ற திடக்கழிவு நிர்வாக மையம் சனிக்கிழமை தொடங்கப்பட்டது.

நகர்மன்றத் தலைவர் பி. தங்கப்பிள்ளை தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் தெ.சு. ஜவஹர் மையத்தைத் திறந்து வைத்துப் பேசியது:

'நாகை நகராட்சிப் பகுதிகளில் சுற்றுச்சூழலை மேம்படுத்தி, நகரை தூய்மைக, பசுமையாக மாற்றும் நோக்கில் இந்த மையம் தொடக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக 3 வார்டுகளில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

நாள்தோறும் அனைத்து வீடுகளிலும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என பிரித்துப் பெறப்பட்டு மக்கும் குப்பைகள் உரக்கிடங்குக்கு எடுத்துச் செல்லப்பட்டு மண்புழு உரமாக மாற்றப்படுகிறது.

மறுசுழற்சிக்கான குப்பைகள் மீண்டும் தரம் பிரிக்கப்பட்டு, மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது. இதன் மூலம் குப்பையில்லாத பகுதிகள் உருவாக்கப்படும்.

பெப்ஸிகோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் நாகை நகராட்சி, எக்ஸ்னோரா இணைந்து இந்த திட்டத்தை செயல்படுத்த உள்ளனர். இந்த திட்டம் வாயிலாக குப்பைகளையும் செல்வமாக மாற்ற முடியும்' என்றார் ஆட்சியர்.

மாநிலத்தில் சென்னைக்கு அருகே பம்மல் நகராட்சியில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது நாகையில் தொடங்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் விரைவில் தென்காசி, கடலூர் நகராட்சிகளிலும் செயல்படுத்தப்படும் என்றார், பெப்ஸிகோ நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன்.

மண்புழு உரம் முதல் அறுவடையை நாகை எம்எல்ஏ வி. மாரிமுத்து வெளியிட நெல்லை மாவட்ட எக்ஸ்னோரா தலைவர் விஜயலெட்சுமி பெற்றுக் கொண்டார்.

நாகை மாவட்ட எக்ஸ்னோரா தலைவர் பி.என். குப்புசாமி, திட்ட இயக்குநர் சந்திரசேகரன், துணைத் தலைவர் மங்களம் பாலசுப்பிரமணியன் ஆகியோர் வழங்கினர்.

நாகை நகர எக்ஸ்னோரா தலைவர் வி. செல்வம் வரவேற்றார். திட்டக்குழு மேலாளர் பரிசுத்தம் நன்றி கூறினார்.